# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

**අංක 2439/ 61 - 2025 ජුනි මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.06.05**

**2439/61 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2015, திசெம்பர் மாதம் 15 ஆம் திகதிய 1945/13 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 231 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித்துண்டுகளினை முழுமையாக அரசுரித் தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ், இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கே.டி லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல.: 4-3/10/2012/LRB/328.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல.: WGSWD&EIP/ACQ/KB/18.
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2025, மே 20.



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், தும்போவில, கட்டுவாவல மற்றும் வேரஹெர பொரலெஸ்கமுவ நகர சபை எல்லையினுள் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2013.10.04 ஆந் திகதிய CO/DSO/2012/1096 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள் :

**01. துண்டு இல. 48 – வேகந்த ஓவிட்ட அல்லது ரன் முதுவாவல கும்புர - விஸ்தீரணம்: 0.0434 ஹெக்டயார்**

வடக்கு: 10 ஆம் கட்டை வீதியின் வரி மதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமையாளர் கண்டுபிடிக்க முடியாத காணி; கிழக்கு: 10 ஆம் கட்டை வடிகால் வீதியின் வரி மதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமையாளர் கண்டுபிடிக்க முடியாத காணி மற்றும் 10 ஆம் கட்டை வீதியின் வரி மதிப்பீட்டு இல. 487/4 ஐ கொண்ட காணி; தெற்கு: இந்த வரைபடத்தில் துண்டு இல. 47, 49 மற்றும் 10 ஆம் கட்டை வீதியில் வரி மதிப்பீட்டு இல. 492/2A ஐ கொண்ட காணி; மேற்கு: 10 ஆம் கட்டை வீதியின் வரி மதிப்பீட்டு இல. 492/2A ஐ கொண்ட காணி மற்றும் 10 ஆம் கட்டை வீதியின் வரி மதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமையாளர் கண்டுபிடிக்க முடியாத காணி.

EOG 06-0063

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2015.12.15 ஆம் திகதிய 1945/13 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக் சோசலிசக் குடியாரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசிரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 231ஆம் இலக்க 2015.12.07 ஆம் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித் துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசரிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. ஆகையால், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2015.12.15 ஆம் திகதிய 1945/ 13 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 231 ஆம் இலக்க 2015.12.07 ஆம் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

கே.டி லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல.: 4-3/10/2012/LRB/328.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல.: WGSWD&EIP/ACQ/KB/18.
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2025, மே 20.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 577A வேரஹெர தெற்கு கிராம அலுவலர் பிரிவில், வேரஹெர (பிரிவு இல. 8 - போதிராஜபுர, பொரலெஸ்கமுவ மாநகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2025.01.20 ஆம் திகதிய CO/DSO/2025/2 ஆம் இலக்க வரைபடத்தில் பின்வரும் காணித் துண்டின் எல்லைகள் :

**01. துண்டு 'A' – நிந்தகும்புர, ஹீன்இரவெல்லகும்புர, பிட்டகொட்டுவேகும்புர மற்றும் கந்துரெகஹவலகும்புர அல்லது வலகடவல - விஸ்தீரணம்: 0.0352 ஹெக்டயார்**

வடக்கு: ஆ.வ.கொ. 9839 இல் துண்டு இல. 18, 10 ஆம் கட்டை வீதியில் உரிமைகோருவோர் கணடுபிடிக்க முடியாத காணி மற்றும் வாச்சி ஹென்னதிகே தயாபால உரிமைகோரும் 10 ஆம் கட்டை வீதியின் வரி மதிப்பீட்டு இல. 487/4 ஐ கொண்ட காணி; கிழக்கு: வாச்சி ஹென்னதிகே தயாபால உரிமைகோரும் 10 ஆம் கட்டை வீதியின் வரி மதிப்பீட்டு இல. 487/4 ஐ கொண்ட காணி மற்றும் ஆ.வ.கொ. 9839 இல் துண்டு இல. 20; தெற்கு: ஆ.வ.கொ. 9839 இல் துண்டு இல. 19; மேற்கு: ஆ.வ.கொ. 9839 இல் துண்டு இல. 19, தலகலகே டட்லி ஹேமசந்திர உரிமைகோரும் 10 ஆம் கட்டை வீதியின் வரி மதிப்பீட்டு இல. 492/2A ஐ கொண்ட காணி மற்றும் ஆ.வ.கொ. 9839 இல் துண்டு இல. 18.

EOG 06 - 0064

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.